பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஐப்பசி 7 (23—10—68) புதன் ★ வெளியூர்: ஐப்பசி 8 (24—10—68) வியாழன் [இதழ்: 105

அவர்கள் வாங்கியதற்கு நாம் கட்டும் வட்டி!

" திட்டங்களுக்காகக் காங்கிரசுக் கட்சி வாங்கிய கடனுக்குத் தமிழகத்தில் இன்று ஆட்சி செய்யும் தி. மு கழகம் வட்டி செலுத்திக்கொண்டிருக்கிறது!

" தமிழகம், மத்திய அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 14 கோடி வட்டியாகச் செலுத்துகிறது!"

--ம. பொ. சிவஞானம்

சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பளியுங்கள்

சென்னை, அக். 23—

" மத்திய காங்கிரசு அரசு புதுவரிகளைப்போட்டு மக்களை வாட்டுகிறது! மாநிலத்திலுள்ள கழக அரசு புது வரிகளைப் போடாமலையே ஆட்சி நடத்துகிறது!

" ஆகவே, ஒன்றரை ஆண்டுக் கால மத்திய காங்கிரசு ஆட்சியையும், மாநிலத்திலுள்ள கழக ஆட்சியையும் ஒப்பிட்டுப் பார்த்தால், அதைவிட இது எவ்வளவோ மேல்!

" ஆகவே, இந்தத் தேர்தலில் நல்ல தீர்ப்புத் தந்து, கழக ஆட்சியை முன்னேற விடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்."

--ம. பொ. சிவஞானம்

(தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

தமிழ்நாட்டுக்குக் காங்கிரசுக் கட்சியினர் செய்த துரோகம்

சங்கரலிங்கனாரைச் சாகடித்தவர்கள் அவர்களே!

நினைவு நாள் கூட்டத்தில் ம. பொ. சிவஞானம் குற்றச்சாட்டு

சென்னை, அக். 23—

" இலட்சியவாதி இறந்துபடலாம்; ஆனால், இலட்சியம் இறந்துபடுவதில்லை! வெளிநாட்டு ஏகாதிபத்தியங்கள் ஜோன் ஆப் ஆர்க்கிற்கும், பகவத் சிங்கிற்கும் இழைத்த அநீதியை, சங்கரலிங்கனாருக்கு ஒரு சுதந்தர அரசு இழைத்தது!

" இந்த அநீதியை அவர்கள், அறியாமையால் செய்யவில்லை -- ஆணவத்தால் செய்தார்கள்! விரோதிகளைக் கூட மன்னிக்கலாம்; ஆனால், துரோகிகளை -- மொழித் துரோகிகளை மன்னிக்கக் கூடாது!

" தமிழ்நாடு பெயர் மாற்றத்துக்கு மத்திய அரசு இடைஞ்சலாக இருக்கவில்லை; ஏனெனில், இப்போது நிறைவேறிய தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்திற்கு எந்தவிதமான தடையும் சொல்லாமல் சட்டமாக்கியுள்ளது! இதிலிருந்து, 'குற்றவாளிகள் யார்' என்பது தெளிவாகிவிட்டது! முன்பிருந்த ஆட்சியாளர்கள் தான் குற்றவாளிகள் என்பது தெரிந்துவிட்டது!"

இவ்வாறு தமிழரசுக் கழகத் தலைவர் ம.பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள், 'தமிழ்நாடு' என்ற பெயர் வைக்கக் கோரி உண்ணா நோன்பிருந்து உயிர்விட்ட தியாகி சங்கரலிங்கனாரின் நினைவு நாள் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குற்றஞ்சாட்டினார்.

வாக்காளரிடை எம். ஜி. ஆர்.

மகத்தான வரவேற்பு---மகிழ்ச்சி வெள்ளம்

'உதயசூரியனுக்கே எங்கள் வாக்கு' என உறுதி

சென்னை, அக். 23—

சென்னை மாநகராட்சித் தேர்தலையொட்டி, புரட்சி நடிகர் எம். ஜி இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள், நேற்றும்--இன்றும் பல்வேறு வட்டங்களுக்கும் வீதி வீதியாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்து, கழக வேட்பாளர்களுக்கும்---தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் ஆதரவு கோரினார்.

வீடுகளிலும், வழிநெடுகிலும் நின்றிருந்து வரவேற்ற வாக்காளர் பெருமக்களைப் பார்த்து, கழக வேட்பாளர்கட்கும், தோழமைக் கட்சி வேட்பாளர்கட்கும் வாக்களித்து வெற்றிவாகை சூட்டிடுமாறு புரட்சி நடிகர் வேண்டுகோள் விடுத்தார்.

எம். ஜி. ஆர். அவர்களை வாக்காளர் பெருமக்கள் -- குறிப்பாகத் தாய்மார்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றும், மாலையணிவித்தும், ஆரத்தி எடுத்தும் ஆங்காங்கே வரவேற்றனர்.

எம் ஜி. ஆர். அவர்கள் வருவதை அறிந்து, வழிநெடுகிலும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்து தங்கள் அன்பையும் ஆதரவையும் தெரிவித்துக் கொண்டனர்.

பல இடங்களில் தாய்மார்களின் வேண்டுகோளுக்கிணங்க எம். ஜி. ஆர்., பல குழந்தைகட்குப் பெயர் சூட்டினார்.

வயதுமுதிர்ந்த தாய்மார்கள் உட்படப் பலரும், 'உதயசூரியனுக்கே எங்கள் வாக்கு' என்று கூறி முகமலர்ச்சியுடன் வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

நேற்று, தென் சென்னை சைதைத் தொகுதியைச் சேர்ந்த 111 முதல் 120 வரையுள்ள வட்டங்களிலும், தியாகராய நகரைச் சேர்ந்த 102-வது வட்டத்திலும் எம். ஜி. ஆர். அவர்கள் வாக்குக் கேட்டார்.

அந்தந்த வட்டங்களில், அந்தந்த வட்டக் கழக—தோழமைக் கட்சி வேட்பாளர்கள் உடன் வந்தனர்.

இன்று 105, 78, 77, 79, 91, 93, 90, 83, 82, 81 ஆகிய வட்டங்களுக்குச் சென்றார்.

விண்வெளியில் அமெரிக்காவின் மாபெரும் சாதனை

கேப் கென்னடி, அக். 23—

'அப்பாலோ-7' என்னும் அமெரிக்க விண்வெளிக் கப்பல் 11 நாட்கள் பூமியைச் சுற்றிவந்து பெர்மூடா தீவுக்குத் தென்கிழக்கில் கடலில் இறங்கியது' மூன்று விண்வெளி வீரர்களும் மீட்கப்பட்டனர்.

'அப்பாலோ-7' விண்வெளிக் கப்பல் ஒரு மாபெரும் சாதனையைப் புரிந்திருக்கிறது; இதற்கு முன்பு வேறு எந்த விண்வெளிக் கப்பலும் 11 நாள் விண்வெளியில் பூமியைச் சுற்றி வந்ததில்லை.

இந்த விண்வெளி வீரர்கள் பல விண்வெளிச் சாதனைகளை முறியடித்து இன்றைய வெற்றியை முறியடித்து இன்றைய வெற்றியை நிலை நாட்டியிருக்கின்றனர்.

மூவரும் மொத்தம் 780 மணி 27 நிமிட நேரம் விண்வெளியில் இருந்துள்ளனர். (இதற்கு முன் 'ஜெமினி' சாதனை 661 மணி 10 நிமிடம்).

தமிழகம் நல்ல தீர்ப்புத் தந்தது

அமைச்சர் மாதவன் தரும் விளக்கம்

இந்தக் கூட்டத்தில் சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் கலந்துகொண்டு பேசியதாவது:—

" தமிழ்நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் வைக்க ஒரு தமிழன் இறந்தது நமக்கெல்லாம் கேவலம்! இந்தக் கேவலத்தை ஏற்படுத்தியவர்கள், முன்பு ஆட்சியில் இருந்தவர்கள்தான்! 'தமிழ்நாடு' என்று பெயர் மாற்றத் தீர்மானத்தை நாங்கள் சட்டமன்றத்தில் கொண்டுவந்த போது அவர்கள் கிண்டலும், கேலியும் செய்தது இன்றும் நமக்கு வேதனை தருகிறது!

சங்கரலிங்கனார் எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர் என்பதில் பெருமை கொள்கிறேன்; ஆனால் அவரது கோரிக்கையை அலட்சியப்படுத்திய காமராசரும், எங்கள் மாவட்டத்தைச் சார்ந்தவர்தான்!

நாங்கள் பதவிக்கு வந்ததும், தமிழ் இனத்தின் வேண்டுகோளை -- கோரிக்கையைத் தான் நிறைவேற்றினோம்!

சங்கரலிங்கனார், காங்கிரசுக் கட்சியைச் சார்ந்தவர்; அவரது தியாகத்தை மதிக்க மறுத்தார்கள் காங்கிரசுக்காரர்கள்!

தமிழகம் நல்ல தீர்ப்புத் தந்துள்ளது; இதற்குப் பிறகாவது காங்கிரசுக்காரர்களும் இது போன்ற விழாக்களில் பங்கேற்க வேண்டும்.

அடுத்த விழாவில் காமராசரும் இந்த விழாவில் பங்கேற்க வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

கவலைப்பட வேண்டிய நிலைமை முற்றிலும் நீங்கிவிட்டது

பெரியாருக்கு அண்ணா மடல்

நியூயார்க், அக். 10—

பேரன்புடைய பெரியார் அவர்கட்கு, வணக்கம்.

என் உடல்நிலை நல்லவிதமாக முன்னேறிவருகிறது வலியும் அதற்குக் காரணமாக இருந்து வந்த நோய்க் குறியும் இப்போது துளியும் இல்லை. பசியின்மையும் களைப்பும் இருக்கிறது.

டாக்டர் மில்லரின் யோசனையின்படி இத்திங்கள் முழுவதும் இங்கு இருந்துவிட்டு நவம்பர் முதல் வாரம் புறப்பட எண்ணியிருக்கிறேன்.

இங்கு ராணி, பரிமளம், செழியன், இராசாராம், டாக்டர் சதாசிவம் ஆகியோர் உடனிருந்து கனிவுடன் என்னைக் கவனித்துக்கொள்கிறார்கள்.

சென்னை மருத்துவமனையிலும், விமானத் தளத்திலும் தாங்கள் கவலையுடனும் கலக்கத்துடனும் இருந்த தோற்றம் இப்போதும் என்முன் தோன்றியபடி இருக்கிறது. ஆகவேதான், கவலைப் படவேண்டிய நிலை முற்றிலும் நீங்கிவிட்டது என்பதனை விளக்கமாகத் தெரிவித்திருக்கிறேன். தங்கள் அன்புக்கு என் நன்றி.

தங்கள் பிறந்த நாள் மலர் கட்டுரை ஒன்றில், மனச்சோர்வுடன், 'துறவியாகிவிடுவேனோ --- என்னவோ' என்று எழுதியிருந்ததைக் கண்டு மிகவும் கவலைக் கொண்டேன்.

தங்கள் பணி, மகத்தான விழிப்புணர்ச்சியைச் சமூகத்தில் கொடுத்திருக்கிறது; புதியதோர் பாதை மக்களுக்குக் கிடைத்திருக்கிறது.

நான் அறிந்தவரையில், இத்தனை மகத்தான வெற்றி வேறு எந்த சமூகச் சீர்திருத்தவாதிக்கும் கிடைத்ததில்லை -- அதுவும் நமது நாட்டில்!

ஆகவே சலிப்போ, கவலையோ துளியும் தாங்கள் கொள்ளத் தேவையில்லை.

என் வணக்கத்தினை திருமதி மணி அம்மையார் அவர்களுக்குத் தெரிவிக்கவும். அன்பு வணக்கங்கள்.

அண்ணாதுரை

புயல் வீசுமா?

சென்னை, அக். 23—

வங்காள விரிகுடாவில் உருவாகிய புயல், மேற்கு--வடமேற்கு திசை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறது.

இதன் காரணமாகத் தமிழகத்திலும், ஆந்திரத்திலும் கடலோரப் பகுதிகளில் பெரும் மழை பெய்யக் கூடும்.

தமிழ்நாட்டில்—தஞ்சை, தென்னாற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலும், ஆந்திரத்தில்—குண்டூர், நெல்லூர், கிருஷ்ணா மாவட்டங்களிலும் மணிக்கு 100 மைல் வேகத்தில் புயலுடன் மழைபெய்யக்கூடுமெனக் கருதப்படுகிறது.

முற்றிய நிலையிலுள்ள நெற்பயிர்களைத் துரிதமாக அறுவடை செய்யுமாறு உழவர் பெருமக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

எங்கள் சாதனைக்கு இதோ பட்டியல்

இருபதாண்டுக்கால காங்கிரசு ஆட்சியின் சாதனை என்ன?

ஒப்பிட்டுப் பார்த்துத் தீர்ப்பளியுங்கள்

மாநகர வாக்காளர்களுக்கு அமைச்சர் கருணாநிதி வேண்டுகோள்

சென்னை, அக். 23—

"சென்னை மாநகரம் தொடர்ந்து காங்கிரசுக்குத் தோல்வி தந்த நகரமாகும்! கழகத்திற்குத் தொடர்ந்து வெற்றியைத் தந்த நகரமாகும்!

"இப்போது ஒரு சிலர் கழகத்தைவிட்டு வெளியேறி, துரோகிகளாக மாறி சுயேச்சைகளாக நிற்கிறார்கள்! அந்தத் துரோகிகளுக்குப் பாடம் கற்பித்து -- அதே நேரத்தில் காங்கிரசுக்கும் தோல்வி தரும் அருமையானதொரு வாய்ப்பு சென்னை மக்களுக்குக் கிடைத்திருக்கிறது!

"நிச்சயம் சென்னை நகரத்து மக்கள், துரோகிகளுக்கு ஒரு நல்ல பாடமும் -- காங்கிரசுக்குத் தோல்வியும் தருவார்கள் என்று நான் திடமாக நம்புகிறேன்.

"கழகத்திலிருந்த சிலர் சுயேச்சையாக நிற்பதால், 'சில நூறு ஓட்டுகள் பிரியும்; அதை வைத்து நாம் வெற்றி பெற்றுவிடலாம்' என்று காங்கிரசுக்காரர்கள் நினைக்கிறார்கள்!

"கழகத்தைத் தங்கள் இதயத்தில் வைத்திருக்கும் மக்களிடம், ஓட்டைப் பிரிப்பது என்பது நடக்காது! எங்காவது வீட்டில் ஏறி ஓட்டைப் பிரித்தால் பிரிக்கலாமே தவிர, வாக்குச் சீட்டைப் பிரிப்பது என்பது நடக்காத காரியம்!

"காங்கிரசுக்காரர்கள் ஒரு புளுகை அவிழ்த்துவிட்டிருக்கிறார்கள்; 'படி அரிசித் திட்டம் இந்த ஒரு மாதத்திற்குத்தான்; அடுத்த நவம்பர் மாதம் படி அரிசித் திட்டம் கிடையாது' என்று பிரச்சாரம் செய்து வருகிறார்கள்! இதற்கு மறுப்புரைத்து அமைச்சர் மதியழகன் அவர்கள், 'தொடர்ந்து படி அரிசித் திட்டம் நிறைவேற்றப்படும்' என்று அறிக்கை விடுத்திருக்கிறார்!

"இதற்குப் பிறகும்கூட காங்கிரசுக்காரர்கள், அந்த அண்டப்புளுகு பிரச்சாரத்தைத் தொடர்ந்து செய்வார்களானால், மக்கள் அதை மறுத்துப் பார்ப்பார்கள்— பொறுத்துப் பார்ப்பார்கள்! அதற்குப் பிறகுகூட அவர்கள் அந்தப் பிரச்சாரத்தைத் தொடருவார்களானால், மக்களும் 'அக்டோபர் மாதத்தோடு காங்கிரசைக் கலைத்துவிடப் போகிறார்கள்' என்ற பிரச்சாரத்தைத் தொடங்கிவிடுவார்கள்! பிறகு அவர்கள் தானாக அடங்கிவிடுவார்கள்!"

என்று அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், சென்னைத் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், மாநகராட்சிமன்றத்தில் கழகம் புரிந்துள்ள சாதனைகளை விளக்கிக் கூறியதாவது :—

"தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம், இந்த மாநகராட்சித் தேர்தல் நேரத்தில் நமக்கு முன் வைத்திருக்கும் கேள்வி, 'கடந்த ஒன்பது ஆண்டுகளாகத் தி. மு. கழகம் மாநகராட்சிப் பொறுப்பை ஏற்று நடத்துகிறதே--- என்ன சாதித்துவிட்டது' என்பது தான்!

மதிப்பிற்குரிய ஒரு பொறுப்பில் அவர் இருக்கிறார் என்ற காரணத்தால், கடந்த ஒன்பதாண்டுகளில் மாநகராட்சியில் தி. மு. கழகம் என்ன சாதித்தது என்பது பற்றிய சில விவரங்களைக் கூறுகிறேன் :—

1959-ம் ஆண்டு முதல் 1968-ம் வரை தி. மு. கழக நிர்வாகம், பாதாளச் சாக்கடை வசதி, கழிவு நீர்த் திட்டம் ஆகியவற்றுக்காகச் செலவழித்த தொகை ரூ. 3.25 கோடி.

மழைக்காலத்தில் மழை நீர் தெருவில் தேங்கிவிடாதபடி அப்புறப்படுத்தக் கட்டப்படும் கால்வாய்த் திட்டங்களுக்குச் செலவிடப்பட்ட தொகை ரூ. 1,15,95,000.

பொதுமக்களின் வசதிக்காகக் குளிக்கும் அறைகள், கழிவறைகள் இந்த 9-ஆண்டுகளில் 198 அமைக்கப்பட்டன; இதற்கான மொத்தச் செலவு ரூ. 10,50,000.

கழிவு நீரை அகற்ற 'ஸ்யூவேஜ்' எனும் கழிவுநீர்க் கால்வாய் 137 மைல் தொலைவுக்கு அமைப்பதற்கு இதுவரையில் ஆன செலவு 32-இலட்சம் ரூபாயாகும்; பல கோடி ரூபாய்கள் செலவிட்டுச் செய்யவேண்டிய திட்டம்; இருப்பினும், படிப்படியாக நாங்கள் இதைச் செய்துவருகிறோம்.

குழந்தைகள் நலப் பிரிவுக்காக இந்த ஒன்பது ஆண்டுக் காலத்தில் ரூ. 11,10,000 செலவழிக்கப்பட்டுக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன!

கல்வித் துறையை எடுத்துக் கொண்டால், இந்த ஒன்பது ஆண்டுக் காலத்தில், 26 உயர்நிலைப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன; 52 துவக்கப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன; 19 விளையாட்டுத் திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

1958-வரை காங்கிரசு இந்த மாநகராட்சியில் இருபது ஆண்டுகள் நிர்வாகம் நடத்தியிருக்கிறது! தி. மு. கழகம் ஒன்பதே ஆண்டுகள்தான் நிர்வாகம் நடத்தியிருக்கிறது!

இந்த இரண்டு நிர்வாகங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமேயானால், இருந்தது எதையும் நாங்கள் கெடுத்து விடவில்லை --- இல்லாதவைகளைத்தான் உருவாக்கியிருக்கிறோம்!

இருபதாண்டுக் கால மாநகராட்சி நிர்வாகத்தில் அவர்கள் அமைத்த ஆரம்பப் பள்ளிகள் 292; ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு துவக்கப் பள்ளிகள் 342-ஆக உயர்ந்திருக்கின்றன!

ஒன்பது ஆண்டுக்கால தி.மு.க. நிர்வாகத்தில், மதிய உணவுத் திட்டத்தின்கீழ் ஒரு நாளைக்கு 43,500 குழந்தைகள் பயன் பெறுகிறார்கள்.

அவர்களது இருபதாண்டுக் கால நிர்வாகத்தில் இருந்த மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் இரண்டே இரண்டுதான்; எங்களது ஒன்பது ஆண்டுக் கால நிர்வாகத்தில் அது, 28-ஆக உயர்ந்தது!

காங்கிரசுக்காரர்கள் முன்பு பழி சுமத்தியதுபோல் நாங்கள் பொறுப்புக்கு வந்து பள்ளிக்கூடங்களையா மூடிவிட்டோம் --- இல்லை --- பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி இருக்கிறோம்!

சென்னை நகரத்தில் அவர்களுடைய இருபதாண்டுக் கால ஆட்சியில் சிமெண்டு, காங்கிரீட் சாலைகளின் நீளம் 21 மைல்களாகத்தான் இருந்தன! இந்த ஒன்பதாண்டுக் கால கழக நிர்வாகத்தில் அந்தச் சாலைகளின் நீளம் 31 மைல்களாக உயர்ந்தன!

அவர்களது இருபதாண்டுக் கால நிர்வாகத்தில் தார் கலந்த சாலைகள் 467 மைல்களாக இருந்தன; கழகத்தின் ஒன்பது ஆண்டுக் கால நிர்வாகத்தில் அது 586 மைல்களாக உயர்ந்தன!

விளக்குகள் மொத்தமாக அவர்கள் ஆட்சியில் இருந்தவை, 21,000; கழக நிர்வாகத்தில் அது, 28,000 விளக்குகளாக உயர்ந்தது!

மெர்க்குரி விளக்குகள் அவர்களது இருபதாண்டுக் கால நிர்வாகத்தில் 5,160 மட்டுமே அமைக்கப்பட்டன; ஒன்பது ஆண்டுக் கால கழக நிர்வாகத்தில், அந்த விளக்குகளின் எண்ணிக்கை 13,427 ஆக உயர்ந்தது!

அவர்கள் காலத்தில் குடிநீர் பயன்படுத்தப்பட்ட அளவு 11,208 மில்லியன் காலன்கள் ஆகும்; அது கழக நிர்வாகத்தில் 13,533 மில்லியன் காலன் தண்ணீராக உயர்ந்தது!

குடிநீர்க் குழாய்களின் நீளம் அவர்களது நிர்வாகத்தில் 877 கிலோ மீட்டராக இருந்தது; கழக நிர்வாகத்தில் அது, 1,107 கிலோ மீட்டராக உயர்ந்தது!

ஏழை -- நடுத்தர மக்களுக்குப் பெரிதும் பயன்படும் திருமண மண்டபங்கள், காங்கிரசாரின் 20 ஆண்டுக்கால நிர்வாகத்தில் ஒன்றுகூட அமைக்கப்படவில்லை! ஆனால் கழக நிர்வாகத்தில், 6- திருமண மண்டபங்கள் அமைக்கப்பட்டன!

பொதுமக்களுக்குக் கோடை காலத்தில் இலவசமாகக் குடிநீர் வழங்கும் குளிர்நீர்ச் சாதனங்கள், காங்கிரசின் இருபதாண்டுக்கால நிர்வாகத்தில் ஒன்றுகூட அமைக்கப்படவில்லை! ஆனால் கழக நிர்வாகத்தில், 5-குளிர் நீர்ச் சாதனங்கள் அமைக்கப்பட்டன!

மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் ஏழைப் பிள்ளைகளுக்குப் புத்தகங்கள், கற்பலகைகள், எழுது பொருட்கள் காங்கிரசு ஆட்சிக் காலத்தில் இலவசமாக அளிக்கப்பட்டதில்லை; ஆனால், கழகம் பொறுப்பேற்ற பிறகுதான் சென்ற ஆண்டில் புத்தகங்கள், கற்பலகைகள், எழுது பொருட்

(3-ம் பக்கம் பார்க்க)

அரசியலைவிட்டு விலகத் தயாரா?

சென்னை, அக். 23—

"தேர்தலுக்காக மக்களை ஏமாற்றுவது, காங்கிரசுக்காரர்களின் வேலைதான் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்!

"சுயராஜ்யம் பெற்றுவிட்டால், 'பாலாறும் தேனாறும் ஓடும்' என்று சொல்லிவிட்டு, பஞ்சத்தையும் பசியையும்தானே தலைவிரித்தாட வைத்தார்கள்!

"மாநகராட்சியின் ரூ. 10 கோடி வருமானத்தில், ரூ. 2 கோடி கல்வித் துறைக்கும், ரூ. 3கோடி சுகாதாரத் துறைக்குமாக— வருமானத்தில் பாதித் தொகையை—இந்த இரண்டுக்கும் செலவிடப்படுகிறது; இந்தியாவிலுள்ள வேறெந்த மாநிலமும் இந்த அளவுக்குப் பணம் செலவிட்டு மக்களுக்காக நன்மை செய்ததில்லை!

"காங்கிரசுக்காரர்கள் ஏழைகள் மீது எத்தனை வரிகளைப் போட்டார்கள்? — எதையாவது தளர்த்தினார்களா?-- கழகத்தின் ஆட்சி வந்த பிறகுதான் ஏழைகள்மீது வரிச்சுமை குறைந்தது.

"பல்லாண்டுக்கால காங்கிரசு ஆட்சியில் நடைபெறாத நல்ல காரியங்கள், கழகத்தின் குறுகிய கால ஆட்சியில் செய்யப்பட்டிருக்கின்றன.

"'கொடுத்த வாக்குறுதிகளைக் கழகம் நிறைவேற்றுவதில்லை' என்று சுப்பிரமணியம் கூறுகிறார். தேர்தலில் சொன்னபடி பஸ் கட்டணத்தைக் குறைக்கவில்லையா? சென்னைக்குத் 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்கவில்லையா?

"'தேர்தலுக்குப் பிறகு தி. மு. கழக ஆட்சி, 'ரூபாய்க்குப் படி அரிசி போடாது' என்று சுப்பிரமணியம் கூறுகிறார்; அப்படித் தொடர்ந்து படி அரிசித் திட்டம் நிறைவேற்றப்படுமானால், சுப்பிரமணியம், அரசியலைவிட்டு விலகிச் செல்லத் தயாரா?

"தி. மு. கழக அரசு, ஏழைகளின் -- பாட்டாளி மக்களின் அரசு! அவர்களுக்குப் பயன்படும் படி அரிசித் திட்டத்தை என்றைக்கும் கைவிடாது! எனவே, சுப்பிரமணியம் போன்றவர்கள், இதுபோன்று பொறுப்பில்லாமல் பேசக் கூடாது!"

--என். வி. நடராசன்

(34-வது வட்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்)

திருந்திவிட்டனரா காங்கிரசார்?

எந்த அடிப்படையில் மீண்டும் வாக்குக் கேட்கிறார்கள்?

இன்று 'ஊழல்' என்பவர்கள் ஒன்பது ஆண்டுக்காலம் என்ன செய்தனர்?

புரட்டர்கட்கு அமைச்சர் மா. முத்துசாமி சாட்டை

சென்னை, அக். 22—

"உலகம் தோன்றியது முதற்கொண்டு ஏனைய நாடுகளெல்லாம், நாகரிகமென்றால் என்னவென்று தெரியாமல் வாழ்ந்துகொண்டிருந்தபோதே, நாம், நாகரிகத்தின் உச்சியில் வாழ்ந்துகொண்டிருந்தோம்! அந்தப் பெருமை மாறி, இன்று ஏழைகளாய் — கோழைகளாய் வாழ்கிறோம்! நமது இந்த நிலையை மாற்றிட — மீண்டும் தமிழன் தலைநிமிர்ந்து நின்றிட -- அறிஞர் அண்ணா அவர்கள் முயற்சி எடுத்து வருகிறார்கள்!

"வரலாற்றை நோக்குவோமேயானால், தமிழகம் அறநூறு ஆண்டுகள் வளர்ச்சிப் பருவத்திலும், அறநூறு ஆண்டுகள் தளர்ச்சிப் பருவத்திலும் இருந்துவந்துள்ளது! உலகம் புகழ ஆட்சி செய்த மூவேந்தர்கட்குப் பின் அறநூறு ஆண்டுகள் தமிழகம் தளர்ந்து இருந்தது; பின், சோமசுந்தரப் பாண்டியனின் ஆட்சியால் அறநூறு ஆண்டுகள் வளர்ச்சியுற்று விளங்கியது; பின் ஆந்திரர்கள், 'கீழ்த் திசையினர்' என்று இங்கு வந்ததன் காரணமாக, அறநூறு ஆண்டுகள் தளர்ச்சியுற்றது தமிழகம்!

"இப்போது மீண்டும் தமிழகத்திற்கு வளர்ச்சிப் பருவம் தொடங்கிவிட்டது! இந்த வளர்ச்சிப் பருவம் ஏற்பட முழு முதற் காரணம் அறிஞர் அண்ணா அவர்கள்தான்!"

இவ்வாறு திரு. மா. முத்துசாமி அவர்கள், 104-வது வட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் விளக்கினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"பணத்துக்கும் -- படாடோபத்துக்கும் மக்கள் மயங்கிய காலம் மலையேறிவிட்டது! இப்போதும் அப்படியே இருப்பார்களேயானால், காமராசரும், பக்தவத்சலமும், சுப்பிரமணியமும்தான் இன்று அமைச்சர்களாக இருப்பார்கள்! மக்கள் மயங்காத காரணத்தால்தான், பட்டக்காரர்களும் -- பஸ் முதலாளிகளும் -- ஆலை அதிபர்களும் -- ஆடிக் காற்றில் அகப்பட்ட துரும்புபோல் அடித்துச் செல்லப்பட்டனர்—1967 தேர்தலில்!

கழகம் ஆட்சிக்கு வந்து ஒன்றரை ஆண்டுதான் ஆகிறது; அதற்குள் கழக ஆட்சியை மாற்றியமைக்க என்ன அவசியம் வந்தது? கழக ஆட்சியில் தமிழ் அழிந்ததா? விலைவாசி உயர்ந்ததா? அல்லது காங்கிரசுதான் அதற்குள் திருந்திவிட்டதா?--இல்லையே! பின் எந்த அடிப்படையில் மீண்டும் மக்களிடம் வந்து காங்கிரசார் வாக்கு கேட்கிறார்கள்?

ஒன்பதாண்டுகளாக மாநகராட்சி கழக நிர்வாகத்தில் ஊழல் என்று கூறும் காங்கிரசாரைக் கேட்கிறேன்—1967-க்குப் பின்னால்தான் தமிழகத்தை நாங்கள் ஆட்சி செய்கிறோம்; அதற்கு முன்பெல்லாம் நீங்கள்தானே ஆட்சி செய்தீர்கள்?

ஒன்பதாண்டுகளாக மாநகராட்சியில் --- கழக நிர்வாகத்தில் உண்மையில் ஊழல் நடைபெற்றிருந்தால், நீங்கள் சும்மா இருந்திருப்பீர்களா?

ஊழலை அம்பலப்படுத்தி --- உங்களிடம் இருந்த சட்டத்தைப்

(3-ம் பக்கம் பார்க்க)

இந்த அரசு இருக்கும்வரை படி அரிசித் திட்டம் இருக்கும்

சென்னை, அக். 23—

"தேர்தலுக்குப் பிறகு படி அரிசித் திட்டத்தை எடுத்துவிடுவார்கள் எனப் பேசி வருகிறார் சுப்பிரமணியம் -- ஏன் எடுக்கப் போகிறோம்?

"இவர்கள், 'படி அரிசித் திட்டம் சாத்தியப்படாது' என்று சொன்னபோதும் நாம் அதை ஏற்கவில்லை! 'இனி போடமாட்டார்கள்' என்று இப்போது சொல்வதையும் நாம் ஏற்கத் தயாராக இல்லை!

"'ரூபாய்க்குப் படி அரிசி போடுகிறோம்' என்று அறிவித்தபோது, இந்த மகானுபாவர்கள், 'போடுங்கள்' என்றா சொன்னார்கள்? 'பட்டணத்துக்கு மட்டுந்தானா --- பட்டிக்காட்டுக்கு இல்லையா --- இது ஏமாற்று வேலை' என்றார்கள்!

"அன்று அப்படிப் பேசியவர்கள் இன்று, 'படி அரிசித் திட்டத்தை எடுத்துவிடப் போகிறார்கள்' என்று பேசுகிறார்களென்றால், இதைவிட கோமாளிக்கூத்து வேறென்ன இருக்கமுடியும்?

"இது ஏழைகள் அரசு; இந்த அரசு இருக்கும்வரையில், படி அரிசித் திட்டம் இருந்துகொண்டே இருக்கும்!

"எனவே, காங்கிரசுக்காரர்களின் பொய்ப் பிரச்சாரம் ஒருநாளும் வெற்றி பெறாது!"

---கே. ஏ. மதியழகன்

(34-வது வட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

டில்லியில் நமது குரல் எதிரொலிக்க...!

சென்னை, அக். 22—

"சென்னை மாநகரத்திற்குக் குடிநீர் வசதி, சுகாதார வசதி சரிவர இல்லையென்றால், அதற்கு முதல் குற்றவாளிகள் இங்கே முதலமைச்சராக இருந்த பக்தவத்சலமும், நிதியமைச்சராக இருந்த சுப்பிரமணியமும்தான்! அவர்கள் மட்டுமல்ல --- அவர்களை உள்ளடக்கிய காங்கிரசுக் கட்சியும்தான்!

"இந்த நகருக்கான தேவைகளை எதிர்காலத்திற்கேற்ற முறையில் முன்பே திட்டமிடத் தவறியவர்கள் காங்கிரசுக்காரர்கள்!

"சென்னைக்குக் குடிநீர் கிடைக்குமா என்று ஆரூடம் கணித்துக் கொண்டிருக்கிறார் சுப்பிரமணியம்! தமிழ்நாட்டில் ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டனவே -- அதுபோது, 'தலைநகரான சென்னை மாநகரத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்' என்று மத்திய அரசை சி. சுப்பிரமணியமும், அவரது சக அமைச்சரான வெங்கட்ராமனும் கேட்டார்களா?

"பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டனவே---ஏன் சென்னை மாநகரத்தின் வளர்ச்சியில் காங்கிரசுக்காரர்கள் அக்கறையற்றிருந்தார்கள்?

"காவிரி நீர்த் திட்டம் பற்றி முன்பு தலைமையமைச்சராக இருந்த பண்டித நேரு அவர்களிடம் கேட்டபோது 'யாரிடமாவது கடன் வாங்கிச் செய்யுங்கள்' என்றாரே!

"சி. சுப்பிரமணியம் அமைச்சராக இருந்த நேரத்தில், பரம்பிக்குளம் திட்டத்தை நிறைவேற்றினர்; கேரள மாநிலத்திலிருந்து அரபிக் கடலில் விழும் அந்த ஆற்றைத் திருப்பிக் கோவை மாவட்டத்திற்கு நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டது; உண்மையிலேயே இது நல்ல காரியம்தான்; ரூ. 50 கோடி செலவில் இது நிறைவேற்றப்பட்டது; அதேபோல், சென்னை நகரத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறதே --- ஏன் அதைத் தீர்க்க அண்டை மாநிலமான ஆந்திரத்திலிருந்து கிருஷ்ணா நீரை சென்னைக்குக் கொண்டுவந்திருக்கக் கூடாது? பதில் சொல்லட்டும் அவர்கள்!

"கேரளத்திலிருந்த கம்யூனிஸ்டுக் கட்சி அரசாங்கத்திடம் பேசி, பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தை நிறைவேற்றியவர்கள், காங்கிரசுக் கட்சியே ஆளும் ஆந்திரத்திலிருந்து ஏன் தண்ணீர் பெற்றிருக்கக் கூடாது?

"இதைப் போலத்தான் சேரிப் பிரச்சினையும் 'விளக்கு வசதி இல்லை; வீதி வசதி இல்லை' என்கிறார்கள்! 'சுயராஜ்யம்' பெற்று 20 ஆண்டுக் காலத்துக்கு மேலாகிறதே---ஏழடுக்கு, எட்டடுக்கு மாடிகள் ஒருபுறமும், 7 அடி உயரம்கூட இல்லாத அளவுக்குக் குடிசைகளும் இருக்கின்றனவே --- இருபதாண்டுக் காலக் காங்கிரசு ஆட்சி என்ன மாற்றத்தைச் செய்தது?

"இப்படிப்பட்ட சீர்கேடுகளுக்கெல்லாம் காரணம் காங்கிரசுக்காரர்கள்! ஆகவே இந்தத் தேர்தலில் எல்லா இடத்திலும் காங்கிரசைத் தோற்கடிக்க வேண்டும்!

"டில்லியில் தமிழகத்தின் குரல் எதிரொலிக்க மாநகராட்சியின் நிர்வாகப் பொறுப்பை நாம் மீண்டும் பெற்றாகவேண்டும்."

---கே. ஏ. மதியழகன்

(34-வது வட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

திருந்தி விட்டனரா காங்கிரசார்?

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பயன்படுத்தி சென்னை மாநகராட்சியைக் கலைத்திருக்கமாட்டார்களா?

நெல்லை, அருப்புக்கோட்டை நகராட்சிகளைக் கலைத்த பெருமையும், புண்ணியமும் உங்களுக்கு இல்லையா?

பின் ஏன் சென்னை மாநகராட்சியைக் கலைக்கவில்லை?

உண்மையில் கழக நிர்வாகத்தில் ஊழல் துளியும் கிடையாது என்பதைத் தவிர, வேறு என்ன காரணம் இருக்கமுடியும்?

"நாங்கள் வெற்றி பெற்றுச் சென்றால் சென்னை மக்களுக்குக் கொசுவலை தருவோம்" என்று பேசுகிறார்கள்.

தமிழகத்தில் உள்ள 65 நகராட்சிகளில் ஏறத்தாழ 55 நகராட்சிகள், காங்கிரசாரின் கைவசம் இருக்கின்றன; அவற்றில் எத்தனை நகரங்களில் மக்களுக்குக் கொசுவலை வாங்கித் தந்திருக்கிறார்கள்?

சென்னை மக்களுக்கு மட்டும் கொசுவலை கொடுப்பதாகச் சொல்வது ஆசை வார்த்தை என்பதுதானே பொருள்?

எதையாவது பேசி --- எப்படியாவது இத்தேர்தலில் மாநகராட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்று அவர்கள் பேசிவருகிறார்கள்! அதற்கு நாம் இடம் தரக்கூடாது!"

அண்ணாவைச் சந்திக்கிறார் அமைச்சர் நெடுஞ்செழியன்

அக். 28-ல் பாரிசுக்குப் பயணமாகிறார்

சென்னை, அக். 22—

பாரிசில் நடைபெறும் ஐ. நா. கல்வி -- பண்பாட்டு நிறுவன (யுனெஸ்கோ) மாநாட்டில் கலந்துகொள்ளும் தமிழகக் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பின்னர் அமெரிக்காவுக்குச் செல்லுகையில், நவ. 2-ம் நாளன்று நியூயார்க் நகரில் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்திப்பார்.

சென்னையிலிருந்து அக். 28-ம் நாளன்று புறப்படும் அவர், பாரிசிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்று, அங்கு பெரிய தொழில் நிறுவனங்கள் சிலவற்றையும், கல்வி நிறுவனங்களையும் பார்வையிட்டுவிட்டு, நவம்பர் இறுதி வாரத்தில் சென்னைக்குத் திரும்புவார்.

அக். 29-ம் நாள் முதல் நவ. 2-ம் நாள் வரை பாரிசில் நடைபெறும் ஐ. நா. கல்வி -- பண்பாட்டு (யுனெஸ்கோ) நிறுவனத்தின் துணை இயக்குநர் ஜெனரல் ஆதிசேஷய்யாவின் அழைப்பின்மீது மாநாட்டில் கலந்துகொள்ள திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள், அக் 28-ம் நாள் பிற்பகல் 2-30 மணிக்கு சென்னையிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு பம்பாய் செல்கிறார்; 29-ம் நாள் அதிகாலை 1 மணியளவில், அங்கிருந்து பாரிசுக்கு விமானம் மூலம் செல்கிறார்.

தமிழகத்தில் அனைத்து நாட்டுத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை நிறுவுவது பற்றியும், தமிழ்நாட்டிலுள்ள முக்கிய கோயில்களைப் புதுப்பிக்கும் பணியை ஐ. நா. கல்வி -- பண்பாட்டு நிறுவனம் மேற்கொள்வது பற்றியும் மாநாட்டின் நிகழ்ச்சிக் குறிப்பில் இடம் பெற்றிருக்கின்றன; இதுபற்றித் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யாவுடன் விவாதிப்பார்.

நவ. 2-ம் நாள் வரையில் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் பாரிசில் தங்கியிருப்பார்; பின்னர் அவர் பிலடெல்பியாவிலுள்ள இந்திய நண்பர்கள் குழுவின் அழைப்பின்மீது அமெரிக்காவுக்குச் சென்று அங்கு மூன்றுவாரம் சுற்றுப் பயணம் செய்வார்.

'பரிசுப்பணத்தை பயனுள்ள வகையில் முதலீடு செய்யுங்கள்'

அமைச்சர் செ. மாதவன் கோரிக்கை

சென்னை, அக். 22—

"தமிழக அரசுப் பரிசுச் சீட்டுகளில் வெற்றி பெற்றவர்கள் தங்களது பரிசுப் பணத்தைச் சிறந்த பயனுள்ள வகையில் முதலீடு செய்து உதவுவதற்குத் தமிழக அரசு எண்ணி இருக்கிறது"

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன் குறிப்பிட்டார்.

பரிசுச் சீட்டு முதலாவது குலுக்கலில், முதல்வது -- இரண்டாவது பரிசுகளைப் பெற்றவர்களுக்கு அவற்றை வழங்கும் விழா இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றபோது சட்ட அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

பரிசுத் தொகைக்கான செக்குகளை, ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், பரிசுகளைப் பெற்றவர்களுக்கு வழங்கினார்; 'பரிசு பெற்றவர்கள் சிறு தொழிலை அல்லது வியாபாரத்தைத் துவக்க அரசு உதவ வேண்டும்' என அவர் கேட்டுக்கொண்டார்.

விழாவுக்குத் தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமை வகித்தார்.

செயற்கை மழை மூலம் தமிழகத்திற்குத் தண்ணீர் வசதி

அமெரிக்க நிறுவன அதிகாரிகள் திட்டம்

அண்ணாவிடம் அளித்துப் படம் மூலம் விளக்கினர்

நியூயார்க், அக். 22—

தமிழகத்தில் செயற்கை மழை பொழியச் செய்து தண்ணீர் வசதிகளைப் பெருகச் செய்வதற்கு வகைசெய்யும் ஒரு திட்டத்தைத் தமிழக அரசு ஆராயும்.

இத்திட்டத்தை ஐ. நா. தண்ணீர் -- மின்சார வசதிப் பிரிவு ஒத்துழைப்புடன் அமெரிக்க நிறுவன அதிகாரிகள், முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் கொடுத்தனர்.

இந்த அமெரிக்கக் கம்பெனி செயற்கை மழை பொழியச் செய்வதற்காக மேற்கொண்ட சில முறைகளையும் அதன் மூலம் அமெரிக்காவிலும், ஈரானிலும் கிடைக்கப் பெற்ற வெற்றிகளையும் சித்தரிக்கும் துண்டுப் படமொன்றையும் அவர்கள் போட்டுச் காண்பித்தனர்.

இந்தத் திட்டத்தின்படி, இந்நிறுவனம், முதலில் தமிழகத்திலிருந்து விவரங்களைச் சேகரிக்கும்; அவற்றின் அடிப்படையில் செயற்கை மழைக்கான பரீட்சார்த்த வேலைகளை அது சிபாரிசு செய்யும்.

தமிழகத்தில் ஓடும் நதிகளின் நீர் பிடிப்புப் பகுதிகளில் பருவ காலத்தில் மேகங்களைக் கொண்டு மழை பெய்யச் செய்வதற்கான 'உத்தி'களைப் பயன்படுத்தலாம் என்பது கருத்தாகும். அவ்வாறு மழை பொழியச் செய்தால் காலாகாலத்தில் பாசனத்துக்கும், மின்சார உற்பத்திக்கும் தேவையான தண்ணீர் கிடைக்கும்.

எங்கள் சாதனைக்கு இதோ பட்டியல்!

[2-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

கள் இலவசமாக எல்லாப் பிள்ளைகளுக்கும் தரப்பட்டன; அதற்காக சென்ற ஆண்டு செலவழிக்கப்பட்ட தொகை, ரூ. 6-இலட்சம்; இந்த ஆண்டு அதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை ரூ 9 இலட்சம்.

காங்கிரசுக் கட்சியினர் மாநகராட்சிப் பொறுப்பேற்று ஆண்ட இருபது ஆண்டுகளில் மாநகராட்சிக்குச் சொந்தமாக இருந்த பள்ளிக் கட்டிடங்கள் 151; இன்றையத்தினம் மாநகராட்சிக்குச் சொந்தமாக இருக்கும் பள்ளிக் கட்டிடங்கள் 234.

ஆகவே, இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து தெரிவதெல்லாம், மாநகராட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட தி. மு. கழகம், கூடுமானவரையில் வசதிகளைப் பெருக்கி இருக்கிறது என்பதுதான்! 'இன்னும் வசதிகள் செய்யப்பட வேண்டும்' என்று கூறினால், அதை நம்மால் புரிந்துகொள்ள முடியும்; 'எதுவுமே செய்யவில்லை' என்று உண்மைகளை மூடி மறைக்க முயலவேண்டாம் என, காங்கிரசுக்காரர்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

'யுனெஸ்கோ'வில் இந்திய ஊழியர்கள்

புதுடில்லி, அக். 22—

'யுனெஸ்கோ' நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் 587 ஊழியர்கள், 'யுனெஸ்கோ'வின் 101 உறுப்பு நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

இந்த நிறுவனத்தில் மொத்தம் 122 நாடுகள் அங்கம் வகிக்கின்றன!

28 நாடுகள் விஷயத்தில், அதிகபட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலைக்கு மேற்பட்டு ஊழியர்கள் இந்த நிறுவனத்தில் பணிபுரிகிறார்கள்; இந்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

1966-ல் இந்த நிலைக்குமேல் இந்திய ஊழியர்களின் எண்ணிக்கை 25 சதவிகிதமாக இருந்தது; இது 1968-ல் 50 சதவிகிதம் அதிகரித்தது.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை

மூங்கில்துரைப்பட்டு

டெண்டர் நோட்டீஸ்

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 1968—69 பருவ அரைப்புக்குக் கீழ்க்கண்ட வேலைகளை மேற்கொண்டு செய்ய 31—10—68 மாலை 5-30 மணிவரை, அந்தந்த வேலைகளில் மிக்க அனுபவமுள்ளவர்களிடமிருந்து டெண்டர்கள் வரவேற்கப்படுகின்றன. ஒவ்வொரு வேலைக்கும் குறிப்பிடப்பட்டுள்ள டேவணித் தொகையை டெண்டருடன் செலுத்த வேண்டும்.

வ.எண்	வேலை விவரம்	டேவணித் தொகை
1.	லாரி, மாட்டு வண்டிகளிலிருந்து கரும்பை நேரடியாகக் கேன் கேரியரில் போடுவதற்கும், தரையில் இறக்கிப் போட்ட கரும்பை மீண்டும் கேன் கேரியரில் எடுத்துப் போடுவதற்கும் தனித்தனியே ரேட் கொடுத்தல் வேண்டும்.	ரூ. 500
2	சர்க்கரை மூட்டைகளைத் தைத்து விலாசமிட்டு, ஆலையிலிருந்து சர்க்கரைக் கிடங்கிற்குக் கொண்டுசென்று 20 மூட்டை உயரம் வரை அடுக்குவதற்கு, 100 மூட்டைகளுக்கு ரேட் கொடுத்தல் வேண்டும்.	500
3.	சர்க்கரைக் கிடங்கிலிருந்து சர்க்கரை மூட்டைகளை இறக்கி அவைகளை லாரிகளில் ஏற்றுவதற்கு 100 மூட்டைகளுக்கு ரேட் கொடுத்தல் வேண்டும்.	250
4.	பில்டர் ஸ்டேஷனில் சேரும் பில்டர் மண்ணை உடனுக்குடன் அப்புறப்படுத்தும் வேலை, 1 டன் மண் அப்புறப்படுத்துதலுக்கு ரேட் கொடுத்தல் வேண்டும்.	250

மற்ற விவரங்களுக்குப் பொது நிர்வாகியை அணுகி அறிந்து கொள்ளவும்.

எம். சீனிவாசன், பி.ஏ.,
பொது நிர்வாகி,
கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்,
மூங்கில்துரைப்பட்டு அஞ்சல், தெ. ஆ. மாவட்டம்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

24--10--68

சென்னை 57-வது வட்டம்

கழக வேட்பாளர் ப. கு. மலையப்பனை ஆதரித்து இரவு 8 மணிக்கு மேடவாக்கம் தெருவில்; தலைவர்: கொ. வீ. முனுசாமி; பேசுவோர்: எஸ். எஸ். மாரிசாமி எம்.பி., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., ஜீவா, கலைமணி, சி. இராமநாதன்.

சங்கிலியாண்டபுரம்

தி. மு. க.-- மக்கள் முன்னேற்ற மன்றச் சார்பில் மாலை 6 மணிக்கு காந்தி தெருவில்; தலைவர்: ரெ. துரைராசு; பேசுவோர்: வெ. கண்ணன், ஜி. பராங்குசம் எம்.எல்.சி., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., மு. நடராசன், எஸ். ஏ. ஜி. ராபி, கோ. இராமாநுசம், கு. இராமசாமி, சி. செல்வராசு.

சென்னை 30-வது வட்டம்

அரு. சக்ரபாணி அவர்களை ஆதரித்து இரவு 8 மணிக்கு பெருமாள் கோவில் தோட்டம் முதல் சந்தில்; தலைவர்: ஜி. இராதாகிருட்டிணன்; பேசுவோர்: நன்னிலம் நடராசன், வீராசாமி எம்.எல்.ஏ., கா. மு. கதிரவன் எம்.எல்.ஏ., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., எம். ஆர். சந்திரன், புலவர் வேதா.

சென்னை 1 5-வது வட்டம்

கழக வேட்பாளர் கோ. அய்யாவு அவர்களை ஆதரித்து மாலை 7-மணிக்கு அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு அருகில்; தலைவர்: பி. ஞானப்பிரகாசம்; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, முரசொலி மாறன் எம்.பி., மாத்ருபூதம் பி.ஏ.பி.எல்., ம. நா. செயசந்திரன், ஜான் டேவிட், கே. சி. எஸ். மணி, சுகத்தோழன்.

சென்னை மாநகராட்சி நிகழ்ச்சிகள்

சென்னை 22-வது வட்டம்

புத்த செட்டி தெருவிலுள்ள மாநகராட்சி மகளிர் உயர்நிலைப் பள்ளியின் புதிய கட்டிடத்தை, திரைப் பட நடிகை திருமதி சிவகாமி சந்திரகாந்தா திறந்துவைப்பார்; இவ்விழா, 24—10—68 மாலை 7-மணிக்கு மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமையிலும்—தோழர்கள் எஸ். ஆறுமுகம் எம்.சி., எஸ். எஸ். துளசிங்கம் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

சென்னை 65-வது வட்டம்

சிந்தாதிரிப்பேட்டை அருணாசல நாயக்கன் தெருவில் மாநகராட்சி மத்திய மருந்துக் கிடங்கின் புதிய கட்டிடத்தை சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா, 24—10—68 மாலை 6-மணிக்குத் திறந்துவைப்பார்; இவ்விழா மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமையிலும்—அ. கரிகாலன் எம்.சி. முன்னிலையிலும் நடைபெறும்; வரவேற்பு: வி. முனுசாமி (மத்தியக் குழுத் தலைவர்), ஆ. அ. கபாலமூர்த்தி எம்.சி.

சென்னை 87-வது வட்டம்

ஆழ்வார்பேட்டை பீமண்ண முதலி தோட்டத்தில் உள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியின் புதிய கட்டிடத்தை 24—10—68 மாலை 5-30 மணிக்கு உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் திறந்துவைப்பார்; இந்த விழா, மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமையிலும்—திரு. என். துரைசாமி முன்னிலையிலும் நடைபெறும்.

சென்னை 98-வது வட்டம்

சைதாப்பேட்டை கலைஞர் கருணாநிதி நகரில் மவுண்ட் சாலையும் -- ஜோன்ஸ் சாலையும் சந்திக்குமிடத்தில் சிறு பாலம் அமைப்பதற்கான அடிக்கல்லை முரசொலி மாறன் நாட்டுவார்; இந்த விழா, 24—10—68 காலை 9-மணிக்கு மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமையிலும்—திரு. சின்னக் கண்ணு முன்னிலையிலும் நடைபெறும்; வரவேற்பு: சி. பி. பவளவண்ணன் (துணை மேயர்), வி. முனுசாமி (மத்தியக் குழுத் தலைவர்).

மாநகராட்சித் தேர்தல் பிரசாரம்

கலந்துகொள்ளும் பேச்சாளர்கள்

சென்னை நகரின் பல்வேறு வட்டங்களிலும் 24—10—68 **அன்று நடைபெறும் தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளும் பேச்சாளர்கள் விவரம் வருமாறு:—**

வட்டம்	பேசுவோர்
2.	அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, நன்னிலம் நடராசன், கா.மு. கதிரவன் எம்.எல்.ஏ.
3.	அமைச்சர் சாதிக் பாட்சா, வேழவேந்தன் எம்.எல்.ஏ., க. அறிவழகன் எம்.எல்.சி.
5.	காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில், ப. உ. சண்முகம் எம்.எல்.சி., இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ.
7.	அமைச்சர் கே. ஏ. மதியழகன், விருதை சீனிவாசன் எம்.எல்.ஏ.
10.	புலவர் அறிவுடைநம்பி, சி. தமிழரசி.
12.	அமைச்சர் மு. கருணாநிதி, அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி., வெ. கண்ணன்.
17.	அமைச்சர் செ. மாதவன், திருப்பூர் மொய்தீன்.
25.	அமைச்சர் செ. மாதவன்; கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ.
29, 30.	கா. மு. கதிரவன் எம்.எல்.ஏ., நன்னிலம் நடராசன், நா. வீராசாமி எம்.எல்.ஏ. இடம்:—பெருமாள் கோயில் தோட்டம், 1-வது தெரு (யானைகவுனி அருகில்).
33.	அமைச்சர் சத்தியவாணி முத்து, கே. ஏ. கிருஷ்ணசாமி, கோவை செழியன்.
34.	அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், கே, ஏ. கிருஷ்ணசாமி, கோவை செழியன்.
35.	அமைச்சர் கே. ஏ. மதியழகன், நா. வீராசாமி எம்.எல்.ஏ., கோபால்சாமி எம்.ஏ., பி.எல்.
36.	என். வி. நடராசன் எம்.எம்.சி., புலவர் அறிவுடைநம்பி, வெ. கண்ணன்.
39.	அமைச்சர் முத்துசாமி, இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., சி. தமிழரசி.
41.	அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, நா. வீராசாமி எம்.எல்.ஏ.
43.	அமைச்சர் செ. மாதவன், கா.மு. கதிரவன்எம்.எல்.ஏ. கோபால்சாமி எம்.ஏ.பி.எல்.
45.	அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, விருதை சீனிவாசன் எம்.எல்,ஏ., வீரஜின்னு.
49.	ப. உ. சண்முகம் எம்.எல்.சி. புலவர் பொன்னிவளவன்.
51.	என். வி. நடராசன் எம்.எல்.சி., ஆலடி அருணா எம்.எல்.ஏ.
54.	என். வி. நடராசன் எம்.எல்.சி., பீர்முகம்மது எம்.எல்.ஏ.. ஆலடி அருணா எம்.எல்.ஏ.
55.	அமைச்சர் மு. கருணாநிதி, வே, கண்ணன்.
60.	அமைச்சர் கே.ஏ. மதியழகன், வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., தஞ்சைத் தமிழழகன்.
63.	அமைச்சர் சத்தியவாணி முத்து, அமைச்சர் மா. முத்துசாமி.
65.	இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., இளம்பரிதி.
66.	அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, அப்துஸ் சமது எம்.பி., முரசொலி மாறன் எம்.பி.
67.	புலவர் பொன்னிவளவன், அப்துஸ் சமது எம்.பி., இளம்பரிதி.
70.	ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., என். வி. நடராசன் எம்.எல்.சி. இடம்:—காஞ்சி பச்சையப்பன் முதலித் தெரு, சித்ரா டாக்கீசுக்கு அருகில்.
76.	புலவர் அறிவுடைநம்பி, நன்னிலம் நடராசன், கோடைக்கானல் மேத்தா எம்.எல்.ஏ.
86.	அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், இளம்பரிதி, பீர்முகம்மது எம்.எல்.ஏ.
88.	அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, பீர்முகம்மது, அறிவுடைநம்பி,
89.	அமைச்சர் கே. ஏ. மதியழகன், எஸ். எஸ். மாரிசாமி எம்.பி., டாக்டர் சந்தோசம் எம்.பி.
90.	அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், நாவளவன்.
91.	அமைச்சர் கே. ஏ. மதியழகன், டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி., இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ.
97.	அமைச்சர் மா. முத்துசாமி, என். வி. நடராசன் எம்.எல்.சி., நாவளவன்.
99.	அமைச்சர் மு. கருணாநிதி, மா, பொ. சிவஞானம் எம்.எல்.ஏ.
101.	அமைச்சர் எஸ் ஜே. சாதிக் பாட்சா, முரசொலி மாறன் எம்.பி., நா. வீராசாமி எம்.எல்.ஏ.
106.	அமைச்சர் மா. முத்துசாமி, ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., எஸ். எஸ். மாரிசாமி எம்.பி.
108.	இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ, கே. ஏ. கிருஷ்ணசாமி. கோவை செழியன்,
109.	அமைச்சர் மா. முத்துசாமி, முரசொலி மாறன் எம்.பி.
110.	அமைச்சர் செ. மாதவன், ம. பொ. சிவஞானம், அறிவுடை நம்பி.

பெரியார் சென்னை திரும்பினர்

சென்னை, அக். 23—

லக்னோவில் கடந்த 12, 13-ம் நாட்களில் நடைபெற்ற உத்தரப் பிரதேசத் தாழ்த்தப்பட்டோர் -- பிற்படுத்தப்பட்டோர் -- சிறுபான்மையோர் மாநாட்டினைத் துவக்கிவைத்து -- இரண்டு நாட்களும் மாநாட்டில் கலந்து அறிவுரை ஆற்றிவிட்டு -- ஐதராபாத்தில் இரு நாட்கள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு -- கார் மூலம் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள், அக். 20-ம் நாளன்று சுற்றுப்பயணக் குழுவினருடன் சென்னை திரும்பினர்கள்.

ஐ. நா. நாள் விழா

ஐ. நா. நாளையொட்டி 24-10-68 மாலை 5-30 மணிக்கு சென்னை மவுண்ட்ரோடு சிறுவர் அரங்கில், தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் தலைமையில் நடைபெறும் விழாவை, கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் துவக்கிவைப்பார்; சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்; அமைச்சர் சத்தியவாணி முத்து வரவேற்புரையாற்றுவார்.

மருத்துவமனையில் எம். எஸ். மணி

அமைச்சர்கள் பார்த்தனர்

வேலூர், அக். 23—

வேலூர் மருத்துவமனையில் இருதய நோய் காரணமாக அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ள கழக சட்டமன்ற உறுப்பினர் எம். எஸ். மணி அவர்களை, கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், பொதுப் பணி அமைச்சர் திரு. கருணாநிதி, திரு. ப. உ. சண்முகம் எம் எல் சி. ஆகியோர் சந்தித்து உடல் நலம் விசாரித்தனர்.

திருவண்ணாமலையில் கலைக் கல்லூரி

திருவண்ணாமலையில் துவங்க இருக்கும் அரசினர் கலைக் கல்லூரிகான அடிக்கல் நாட்டு விழா, பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில்—கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் நடத்திவைக்கப்பட்டது.

விழாவில் ப. உ. சண்முகம் எம்.எல்.சி., முருகையன் எம்.எல்.ஏ., விஜயராஜ் எம்.எல்.ஏ, தேவராச முதலியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

டி. பிரகாசம் உருவச் சிலை திறப்பு

சென்னை, அக். 22—

சென்னை எஸ்பிளனேடிலுள்ள வெளியூர் பஸ் நிலையத்திற்கு அருகில் ரூ. 30,000 செலவில்--மாநகராட்சியால் வழங்கப்பட்டுள்ள ஆந்திரகேசரி டி. பிரகாசம் அவர்களின் உருவச் சிலையை, குடியரசுத் துணைத் தலைவர் திரு. வி. வி. கிரி அவர்கள், அக். 19-ம் நாளன்று திறந்து வைத்தார்.

உருவச் சிலை, கோட்டை இரயில்வே நிலையத்திற்கு அருகில் உள்ள போக்குவரத்து வட்டத்தில், உயரமானதோர் மேடையில் வைக்கப்பட்டிருக்கிறது.

விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில், அமைச்சர் கருணாநிதி அவர்கள், 'தமிழ் நாட்டின் தலைநகரில் ஆந்திரத் தலைவரின் சிலை வைக்கப்பட்டிருப்பது, தமிழர்களுக்குக் குறுகிய மனப்பான்மை கிடையாது என்பதைக் காட்டுகிறது' எனக் குறிப்பிட்டார்.

'திரு. பிரகாசம் அவர்களுக்குச் சிலை வைக்கவேண்டும்' என்று முதலமைச்சர் அண்ணா அவர்களின் யோசனையை விரைவில் செயல்படுத்திய மாநகராட்சிக்கு நன்றி செலுத்தினர்.

மேயர் டாக்டர் அபிபுல்லாபேக், அனைவரையும் வரவேற்றார்.

விழாவில் கலந்துகொண்ட திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள், பிரகாசம் அவர்களின் சிறப்புமிக்க படைகளைப் பாராட்டினர்.

மாநகராட்சி தி. மு. க. குழுத் தலைவர் வி. முனுசாமி நன்றி கூறினர்.

அன்று விரட்டியடித்தனர்--- இன்று வேதனைப்படுகின்றனர்!

நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி அமெரிக்கக் குடிமகன் ஆனர்

சொந்த நாட்டைத் துறந்து அயல்நாட்டில் ஆராய்ச்சி நடத்துகின்றனர் ஆயிரம் விஞ்ஞானிகள்

புதுடில்லி, அக். 19—

மருத்துவத் துறையில் உயிரியல் இரசாயன ஆராய்ச்சி நடத்திக் கண்டுபிடித்துள்ள பாரம்பரிய நிர்ணயத் தத்துவத்துக்காக நோபல்பரிசு பெற்றுள்ள டாக்டர் அரிகோவிந்த கொரோனாவுக்கு, சில ஆண்டுகளுக்குமுன் இந்தியாவில் உரியதோர் பதவி கிடைக்காமற்போய்விட்டது என்ற தகவலை அறிந்து அதிகாரிகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்ட ஏராளமான விஞ்ஞானிகளைத் திரும்பப்பெற என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம் என்பது பற்றி அவர்கள் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருவதாகத் தெரிகிறது.

நோபல் பரிசு பெற்றுள்ள இந்திய விஞ்ஞானியான டாக்டர் கொரனாவை, இந்தியாவுக்கு மீண்டும் வரவழைக்கச் சில இந்திய விஞ்ஞானிகள் 1959-ம் ஆண்டிலேயே முயன்றனர் என்றும், ஆனால் விஞ்ஞான ஆய்வுத்துறை அதிகாரிகளின் அக்கறையின்மை காரணமாக அது கைகூடாமல் போய்விட்டது என்றும் புதுடில்லியில் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பாரம்பரிய நிர்ணயத் தத்துவத்துக்கான விளக்கத்தை டாக்டர் கொரோனா கண்டுபிடித்ததன் பலனாக, 'பாரம்பரியப் பொறியியல்' என்ற புதிய விஞ்ஞானத் துறையே தோன்றிவிட்டது.

6-ஆண்டுக்காலம் இதில் ஆய்வு நடத்திவிட்டு டாக்டர் கொரோனா, இந்தியாவுக்குத் திரும்பி வந்தார்; இங்கு மேற்கொண்டு அத்துறையில் ஆராய்ச்சி நடத்தி நாட்டிற்குப் பேரும் புகழும் தேடித்தர விரும்பினர்; ஆனால், அவருடைய ஆராய்ச்சித் திறனைப் புரிந்துகொள்ளும் திறன் இந்நாட்டில் எந்த நிபுணருக்கும் இல்லாமற் போய்விட்டது; இங்குள்ள 'அதிகார ஆணவ'மும், 'பொறாமை'யும் ஒன்று சேர்ந்து அவருடைய திட்டத்தை உருவாகாமல் செய்துவிட்டன! ஒரு விரிவுரையாளர் பதவிகூட அவருக்கு இங்கு கிடைக்காமற் போய்விட்டது! பெரிதும் ஏமாற்றமடைந்துவிட்ட அவர், நாட்டைவிட்டே வெளியேறிவிட்டார்.

1950-ம் ஆண்டில் பிரிட்டனுக்குச் சென்ற அவர் சில ஆண்டுக் காலம் அங்கு பணியாற்றிவிட்டு, பின்னர் கனடாவுக்குச் சென்றார்; 1958-ல், அமெரிக்காவுக்குச் சென்றார்; இரண்டாண்டுகளுக்குமுன்பு அமெரிக்கக் குடிமகனாக உரிமை பெற்றார்.

"1959-ம் ஆண்டிலேயே அவருக்கு அனைத்து நாட்டுப் புகழ் கிடைத்திருந்தபோதிலும், இந்தியாவிலிருந்த விஞ்ஞானத் துறை அதிகாரிகளின் குறுகிய மனப்பான்மை காரணமாக அவருக்கு உரிய மதிப்பு கிடைக்காமலிருந்தது"

என்று ஐதராபாத் வட்டார ஆராய்ச்சித் துறை நிபுணர் ஒருவர் கூறியிருக்கிறார்.

டாக்டர் கொரோனாவுக்குக் கிடைத்துள்ள பெருமை குறித்து அமெரிக்காவிலுள்ள ஏராளமான இளம் இந்திய விஞ்ஞானிகளைப் பெருமிதம் கொள்ளச் செய்திருக்கிறது; அங்கு 1.000 இந்திய ஆய்வாளர்கள் உள்ளனர்; 10-பேர் ஆராய்ச்சிப் பாடப் பிரிவுத் தலைவர்களாகவும், 68-பேர் பேராசிரியர்களாகவும், 79-பேர் இணைப் பேராசிரியர்களாகவும், 259-பேர் துணைப் பேராசிரியர்களாகவும் பணியாற்றுகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக. திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-13) [illegible] வெளியிடப்பெற்றது.